சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம்,
சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515580

**ஆணை நாள் 07.06.2022**

**முன்னிலை**

**திரு மு.ஸ்ரீதர், பி.டெக்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA17112/C/2021**

திரு M. பாண்டிமுத்து — மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்/பகிர்மானம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
பகிர்மான கழகம், காரைக்குடி. — பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச்சட்டம் பிரிவு 6(1)கீழ் மனுசெய்த நாள் | 21.04.2021 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 09.12.2021 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 17.12.2021 |
| ஆணையத்தின் அறிவிப்பு நாள் | 01.02.2022 |

******

**ஆணை**

இன்று (07.06.2022) முற்பகலில் தொலைபேசி மூலம் வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு M. பாண்டிமுத்து மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு ஜான்சன், செயற்பொறியாளர்/பகிர்மானம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், காரைக்குடி ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் 21.04.2021 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் எம்.பாண்டிமுத்து, முகவர் முதல்நிலை, புழுதிப்பட்டி பிரிவு, ஒழுங்கு நடவடிக்கை குற்றச்சாட்டு சுமத்தியது குறித்து வாரிய தரப்பு சாட்சிகளின் வாக்குமூல நகல்கள் வழங்கக்கேட்டு, பொதுத் தகவல் அலுவலர் மற்றும் செயற்பொறியாளர்/பகிர்மானம், தமிழ்நாடு மின்சார வாரியம், காரைக்குடி என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 09.12.2021 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல்

மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கும், 17.12.2021 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கும் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.06.2022) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தான் தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்த மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் இது நாள்வரை தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்கப் பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் ஆணையத்தைக் கோரினார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் கோரும் தகவல்கள் குறித்து விசாரணை நடந்துகொண்டுள்ளதாகவும், நேரடி விசாரணையின்போது மேல்முறையீட்டாளர் கோரும் தகவல்களை நேரில் பார்க்கவும், ஆய்வு செய்யவும் அனுமதி வழங்கப்படும் என 31.03.2021 மற்றும் 24.11.2021 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல்கள் வழங்கியுள்ளதாகவும் பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார். இதுகுறித்து மனுதாரரும் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில், இவ்வழக்கின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகின்றது.

**ஒம்/- மு.ஸ்ரீதர்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**பிரிவு அலுவலர்/ பிரிவுப் பதிவாளர்**

**வழக்கு எண். SA17112/C/2021**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்/பகிர்மானம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
காரைக்குடி.

**மனுதாரர்**

திரு M. பாண்டிமுத்து,
முகவர் முதல்நிலை(தேர்வுநிலை),
தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
பகிர்மானம், புழுதிப்பட்டி பிரிவு,
சிவகங்கை மாவட்டம்.

Copy to : Judgement file
AM/PS - 160622